சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:–25.07.2022

<u>**சாதாரணக்கூட்டம்**</u>

திருவள்ளுவர் ஆண்டு, பிலவ வருடம் ஆடி மாதம் 13–ஆம் நாள் (ஜூலை திங்கள் 29–ஆம் நாள்:–29.07.2022) வெள்ளிக் கிழமையன்று காலை 11.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி நகர்மன்ற சாதாரணக்கூட்டம் நகர்மன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற இருப்பதால் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளும்படி அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நகர்மன்றத் தலைவர்,
சின்னமனூர் நகராட்சி.

**பொருள் எண்.1**

சின்னமனூர் நகராட்சி, ஆணையாளர் அவர்களின் ஜீன் /2022ஆம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் பதிவு செய்யலாம்**

**நகர்மன்ற தீர்மான எண்:** **121** , நாள் **29.07.2022**
**தீர்மானம் :** பதிவு செய்யப்பட்டது.

*******

**பொருள் எண்.2**

சின்னமனூர் நகராட்சி, பொறியாளர் அவர்களின் ஜீன் /2022ஆம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் பதிவு செய்யலாம்**

**நகர்மன்ற தீர்மான எண்:** **122** , நாள் **29.07.2022**
**தீர்மானம் :** பதிவு செய்யப்பட்டது.

*******

**பொருள் எண்.3**

இந்நகராட்சியில் மேற்கொள்ளப்படும் அனைத்து பணிகளும் இணையதளம் வழியாக செயல்பட்டுக் கொண்டிருப்பதால், கூடுதலாக கணினிகள் தேவைப்படுகிறது. அதனால் Intel I-3 Micro Processor with 8 GB Ram, 1TB Hard Disk கொண்ட **6** எண்ணம் (Chairman, A1, E2, SO, Typist and Collection Centre) Epson M-100 Laser Printer 3 Nos (Revenue Section, Engineer Section and General Section) மற்றும் Epson M-100 Color Laser 1 No (Public Health Section) விநியோகம் செய்யும் பணிக்கு உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.**3,15,000/–**க்கு (மூன்று இலட்சத்து பதினைந்து ஆயிரம் மட்டும்) இந்நகர்மன்ற தீர்மானம் எண்.**120**, நாள்.**27.06.2022**ம் அன்று இந்நகர்மன்றத்தில் நிர்வாக அனுமதி பெறப்பட்டு **13.07.2022**ம் தேதியன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விவரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | விவரம் | M/s Mercury Software, Periyakulam | M/s Swetha Systems, Madurai |
|---|---|---|---|
| 1. | Intel I-3 Micro Processor with 8 GB Ram, 1TB Hard Disk – 1 Nos | 43500/– | 45100/– |
| 2. | Epson M-100 Laser Print– 1 Nos | 12000/– | 13000/– |
| 3. | Epson M-100 Colour Laser– 1 Nos | 14500/– | 15500/– |

**அலுவலகக் குறிப்பு:–** **மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் M/s Mercury Software, Periyakulam என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக இருப்பதினால் மேற்கண்ட விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.7275/2022/இ2)**

**நகர்மன்ற தீர்மான எண்:** 123 , நாள் 29.07.2022

**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.4**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9–இல் தேரடி தெருவில் அமைந்துள்ள தாசில்தார் கிராம முனிசிபல் சாவடிக்கு வழங்கப்பட்டுள்ள குழாய் இணைப்பு எண்.980, புதிய குடிநீர் குழாய் இணைப்பு எண்.121/009/00075, 2005–06 ஆண்டு முதல் 2022–2023ம் ஆண்டு முடிய குடிநீர் கட்டண நிலுவைத் தொகை ரூ.14060/– மற்றும் அபராதக் கட்டணம் ரூ.3860/– ஆக மொத்தம் ரூ.17920/– (பதினேழாயிரத்து தொள்ளாயிரத்து இருபது மட்டும்) செலுத்தப்படாமல் நிலுவையாக உள்ளது.

மேற்படி இணைப்பிற்கான நிலுவை குடிநீர் கட்டணத்தினை செலுத்தக் கோரி அறிவிப்புக்கள் ஒவ்வொரு ஆண்டிற்கும் அனுப்பப்பட்டதில் 15 ஆண்டுகளுக்கும் மேலாக மேற்படி குழாயில் குடிநீர் வரவில்லை என்றும், அதனால் நிலுவைத் தொகையினை செலுத்த இயலாத நிலை உள்ளதாக, கிராம நிர்வாக அலுவலர் அவர்களின் 24.06.2022ம் நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மேற்படி கிராம நிர்வாக அலுவலகம், தல ஆய்வு செய்ததில், மேற்படி கட்டிடத்திற்கு வழங்கப்பட்டுள்ள குடிநீர் இணைப்பு பயன்பாட்டில் இல்லை எனத் தெரிய வருவதாக குடிநீர் திட்ட பணி மேற்பார்வையாளர் அவர்கள் தனது 14.07.2022ம் தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளார். எனவே 2005–2006 முதல் 2022–2023 முடிய உள்ள காலத்திற்கு தாசில்தார் கிராம முனிசிபல் சாவடிக்கு வழங்கப்பட்டுள்ள குழாய் இணைப்பு எண்.980, புதிய குடிநீர் குழாய் இணைப்பு எண்.121/009/00075–க்கான குடிநீர் குழாய் இணைப்புக் கட்டண நிலுவை ரூ.17920/–ஐ (கட்டணம் ரூ.14060+தாமத கட்டணம் ரூ.3860/– ஆக மொத்தம் ரூ.17920/–) (பதினேழாயிரத்து தொள்ளாயிரத்து இருபது மட்டும்) கேட்பிலிருந்து தள்ளுபடி செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **15 ஆண்டுகளுக்கு மேல் மேற்படி குடிநீர் இணைப்பு பயன்பாட்டில் இல்லை என குடிநீர் திட்ட பணி மேற்பார்வையாளர் அவர்கள்**

**தெரிவித்துள்ளதால், மேற்படி குடிநீர்க் கட்டண நிலுவைத் தொகை ரூ.17920/– கேட்பிலிருந்து தள்ளுபடி செய்யலாம்.**

**நகர்மன்ற தீர்மான எண்:** 124 , நாள் 29.07.2022
**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.5**

இந்நகராட்சி அலுவலகத்தில் உள்ள கணினிகளுக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் பிரிண்டர்களுக்குத் தேவையான புதிய டோனர்கள் மற்றும் இதர தளவாட சாமான்கள் வாங்கும் பணி மேற்கொள்ள 2022–23ம் ஆண்டிற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.1,50,000/– க்கு (ஒரு இலட்சத்து ஐம்பது ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1.மன்றம் அனுமதிக்கலாம்.**
**2.மேற்காணும் செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம்.**

**நகர்மன்ற தீர்மான எண்:** 125 , நாள் 29.07.2022
**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.6**

மாண்புமிகு தமிழக உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் மான்ய கோரிக்கை அறிவிப்புகளின்படி, இந்நகராட்சியில் உள்ள பழைய தேக்க திடக்கழிவுகளை Bio Mining முறையில் அகற்றப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி சின்னமனூர் நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.27, வண்ணான்கரடு, அய்யனார்புரம் பகுதியில் அமைந்துள்ள 5.26 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள உரக்கிடங்கில் சுமார் 2 ஏக்கர் பரப்பளவில் குவிந்துள்ள 25,900 கனமீட்டர் பழைய தேக்க திடக்கழிவுகளை Bio Mining முறையில் அப்புறப்படுத்தும் பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மேற்படி உரக்கிடங்கில் உள்ள குப்பைகளை சர்வே செய்யும் பணி மேற்கொள்ளுவதற்கு The Director, Centre for Environmental Studies, Anna University, Chennai அவர்களின் 21.06.2022ம் தேதிய கடித எண்.1141/CES/SKI/Chinnamanur/2022–23–இன்படி கலந்தாலோசகர் கட்டணம் தொகை ரூ.177000/–ஐ (ஒரு இலட்சத்து எழுபத்து ஏழாயிரம் மட்டும்) "**The Director Centre for Technology Development and Transfer (CTDT), Anna University, Chennai**" அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—** **1.மன்றம் அனுமதிக்கலாம்.**
**2.மேற்காணும் செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம்.**
**3. அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.**

**நகர்மன்ற தீர்மான எண்:** **126** , நாள் **29.07.2022**
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.7**

சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் **18.07.2022**ம் தேதிய செயல்முறை ஆணை ந.க.**9512/2022**/SBM-**1**—இன்படி இந்நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம் (Urban 2.0) —இன் கீழ் தொகை ரூ.**110.00** (GOI Share 50%-Rs.55.00 Lakhs, GoTN Share 33% - Rs.36.00 Lakhs and ULB Contribution 17%- Rs.18.70 Lakhs) இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சிக்குச் சொந்தமான வார்டு எண்.**27**, வண்ணான்கரட்டில் அமைந்துள்ள உரக்கிடங்கில் உள்ள பழைய தேக்க திடக்கழிவுகளை Bio Mining முறையில் அகற்றும் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி வரப்பெற்ற செயல்முறை ஆணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—** **1.மன்றம் பதிவு செய்யலாம்.**
**2. நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.7620/2016/இ1).**

**நகர்மன்ற தீர்மான எண்:** 127 , நாள் 29.07.2022
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.8**

சின்னமனூர் நகராட்சிக்கு அரசாணை (எம்.எஸ்) எண்.**88**, நாள்.**17.06.2022** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (என் எஸ்) துறையின்படி, கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் **2022—23**ன் கீழ், இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**19**இல் அமைந்துள்ள விஸ்வன்குளத்தினை அபிவிருத்தி பணிகள் செய்ய ரூ.**73.70** இலட்ச மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு **15.07.2022** அன்று Online மூலம் வரப்பெற்ற தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள் சரிபார்க்கப்பட்டதை தொடர்ந்து **19.07.2022**ம் தேதியன்று விலை மதிப்பிலான ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**1.**திரு.R.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி—**4.90** சதவிகிதம் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதல்

2.திரு.K.வனராஜ், சின்னமனுார் – 5.14 சதவிகிதம் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதல்.

அலுவலகக் குறிப்பு:–

1.கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2022–23இன் கீழ் மேற்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அதன்படி வரிசை எண்.1, திரு.ஆர்.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி என்பவரது விலைப்புள்ளி 4.90% சதவிகிதம் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதலாக ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்துள்ளதால், மேற்படி ஒப்பந்ததாரரிடம் பேரப்பேச்சு கடிதம் (Negotiation Letter) வழங்கக்கோரி 19.07.2022–இல் கடிதம் அனுப்பியமைக்கு, திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்தக்காரர் PWD, TWAD and Electricals Schedule of Rates 2021–22இன்படியே விலை விதிகத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதாகவும், மேலும் இனிவரும் 2022–23ம் ஆண்டு Schedule of Rates–இல் 10% விலை விகிதம் கூடுதலாக வாய்ப்பு உள்ளதாலும், மூலதனப்பொருட்கள் விலையுயர்வு மற்றும் தொழிலாளர் கூலி உயர்வு காரணமாக ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலையினை குறைக்க இயலாது என தெரிவித்துள்ளார். மேலும், 2000–ஆம் வருடத்திய உள்ளாட்சி அமைப்பிற்கான பொறியியல் நடைமுறை நூல் இயல்–II (Chapter-II) விதி எண்.2.7.2–இன்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

2.அவரச அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம் (ந.க.எண்.3800/2021/இ1)

நகர்மன்ற தீர்மான எண்: 128 , நாள் 29.07.2022

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.9**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.18, வ.உ.சி 3வது தெரு மற்றும் 4வது தெருக்களில் மக்களின் நலன் கருதி சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால்கள் கட்டும் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.2,00,000/-க்கு (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு:-** **1.மன்றம் அனுமதிக்கலாம்.**
**2.மேற்காணும் செலவினத்தை நிதிநிலைக்கேற்ப வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம்.**

**நகர்மன்ற தீர்மான எண்:** 129 , நாள் 29.07.2022

**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.10**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.23 மற்றும் 24 ஆகிய பகுதிகளில் சிறுபாலம் பழுது ஏற்பட்டு பொது மக்களுக்கு மிகுந்த சிரமம் ஏற்படும் சூழ்நிலை உள்ளது. எனவே பொது மக்களின் நலன் கருதி சிறுபாலம் கட்டும் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.200000/-க்கு (இரண்டு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-** **1.மன்றம் அனுமதிக்கலாம்.**
**2.மேற்காணும் செலவினத்தை நிதிநிலைக்கேற்ப வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம்.**

**நகர்மன்ற தீர்மான எண்:** 130 , நாள் 29.07.2022

**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.11**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.10 ஐக்கம்மாள் கோவில் தெரு, வடக்கு அய்யன் கோவில் தெருக்களில் உள்ள சிறுபாலங்கள் பழுது ஏற்பட்டு பொது மக்களுக்கு மிகுந்த சிரமம் ஏற்படும் சூழ்நிலை உள்ளது. எனவே பொது மக்களின் நலன் கருதி சிறுபாலங்கள் கட்டும் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.200000/-க்கு (இரண்டு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-** **1.மன்றம் அனுமதிக்கலாம்.**
**2.மேற்காணும் செலவினத்தை நிதிநிலைக்கேற்ப வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம்.**

**நகர்மன்ற தீர்மான எண்:** 131 , நாள் 29.07.2022

**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.12**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.21, வில்லாயுதம் தெரு, ட்ரஸ்ட் அண்ணாமலை தெரு மற்றும் மந்தையம்மன் கோவில் ஆகிய தெருக்களில் உள்ள மழைநீர் வடிகால் சிதலமடைந்து பொது மக்களுக்கு சுகாதாரக்கேடு ஏற்பட்டு தொற்று நோய் பரவும் அபாயம் உள்ளது. எனவே பொது சுகாதாரம் மற்றும் பொது மக்களின் நலன் கருதி மழைநீர் வடிகால் அமைக்கும் பணி மேற்கொள்ள ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.2,50,000/–க்கு (இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1.மன்றம் அனுமதிக்கலாம்.**
**2.மேற்காணும் செலவினத்தை நிதிநிலைக்கேற்ப வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம்.**

**நகர்மன்ற தீர்மான எண்:** 132 , நாள் 29.07.2022

**தீர்மானம்** : அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.13**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.21, குட்டியப்பன் தெருவில் உள்ள மழைநீர் வடிகால் சிதலமடைந்து பொது மக்களுக்கு சுகாதாரக்கேடு ஏற்பட்டு தொற்று நோய் பரவும் அபாயம் உள்ளது. எனவே பொது சுகாதாரம் மற்றும் பொது மக்களின் நலன் கருதி மழைநீர் வடிகால் மற்றும் சேதமடைந்துள்ள பேவர் பிளாக் சாலையினை மாற்றியமைக்கும் பணிகள் மேற்கொள்ள ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.2,50,000/–க்கு (இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு:–** **1.மன்றம் அனுமதிக்கலாம்.**
**2.மேற்காணும் செலவினத்தை நிதிநிலைக்கேற்ப வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம்.**

**நகர்மன்ற தீர்மான எண்:** 133 , நாள் 29.07.2022

**தீர்மானம்** : அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.14**

இந்நகராட்சிக்குச் சொந்தமான வார்டு எண்.2, காலனி பள்ளித் தெருவில் அமைந்துள்ள நகராட்சி நடுநிலை பள்ளியில் கல்வி பயிலும் குழந்தைகளின் நலன் கருதி சில மராமத்துப் பணிகள் மேற்கொள்ள ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.7,25,000/–க்கு (ஏழு இலட்சத்து

இருபத்து ஐந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1.மன்றம் அனுமதிக்கலாம்.**
**2.மேற்காணும் செலவினத்தை நிதிநிலைக்கேற்ப கல்வி நிதியில் மேற்கொள்ளலாம்.**

**நகர்மன்ற தீர்மான எண்:** 134 , நாள் 29.07.2022

**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது.

*******

## பொருள் எண்.15

இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள ஜெனரேட்டர்–88AH மின்கலப்பெட்டி 1 எண்ணம் மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள ஜென்செட்டிற்கு –100AH மின்கலப்பெட்டி–2 எண்ணம் ஆக மொத்தம் 3 எண்ணம் புதிய மின் கலப் பெட்டி (Battery) வாங்கி பொருத்தும் பணிக்கு ஆகும் உத்தேச தொகை ரூ.36000/–க்கு (முப்பத்து ஆறாயிரம் மட்டும்) இந்நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. மேற்கண்ட செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். (ந.க.எண்.7636/2022/இ2)**

**நகர்மன்ற தீர்மான எண்:** 135 , நாள் 29.07.2022

**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.16**

சின்னமனூர் நகராட்சி 27 வார்டுகளாகப் பிரிக்கப்பட்டு, நகரிலிருந்து 4.700 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள வேம்படி களத்தின் அருகில் உள்ள முல்லைப் பெரியாற்றிலிருந்து குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதாவது முல்லை பெரியாரின் நடுவில் அமைக்கப்பட்டுள்ள 5 நீர் உறிஞ்சு கிணறுகளின் அடியில் பொருத்தப்பட்டுள்ளன. 7.50 குதிரைத் திறன் மற்றும் 5.0 குதிரைத் திறன் கொண்ட 10 எண்ணம் மின் மோட்டார்கள் மற்றும் ஆற்றின் கரையில் அமைக்கப்பட்டுள்ள 15 குதிரை திறன் சக்தி கொண்ட மோனோ பிளாக் மின் மோட்டார்கள் இரண்டு எண்ணம் மூலம் குடிநீரானது தலைமை நீரேற்று நிலையத்தில் கட்டப்பட்டுள்ள இரண்டு எண்ணம் நீர் சேகரம் செய்யும் தொட்டிக்கு (Sump) குடிநீர் சேகரம் செய்யப்பட்டு, மேற்படி இரண்டு தொட்டிகளிலிருந்து 7.50 குதிரை திறன் மற்றும் 50 குதிரைத் திறன் சக்தி கொண்ட நான்கு மின் மோட்டார்கள் மூலம் 4.700 கிலோ மீட்டர் தூரத்திற்கு பதிக்கப்பட்டு பிரதான குடிநீர் குழாய்கள் (Pumping Main from WS Head Works to Filter Bed) மூலம் குடிநீர் பம்ப் செய்யப்பட்டு கல்யாண மண்டபம் பள்ளி அருகில் உள்ள நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டு, குடிநீர் சுத்திகரிக்கப்பட்டு, அங்குள்ள இரண்டு தரைமட்ட தொட்டிகளில் குடிநீர் சேகரம் செய்யப்பட்டு அங்கிருந்து சீப்பாலக்கோட்டை ரோட்டில் கிருஷ்ணய்யர் மேல்நிலைப்பள்ளிக்கு எதிர்புறம் அமைந்துள்ள மேல்நிலை மற்றும் தரைமட்ட தொட்டிகளுக்கு 40 குதிரை திறன் கொண்ட மூன்று மோட்டார்கள், 30 குதிரை திறன் கொண்ட ஒரு மோட்டார்கள், 20 குதிரை திறன் கொண்ட இரண்டு மோட்டார்கள் மற்றும் 15 குதிரை திறன் கொண்ட 3 மோட்டார்கள் மூலம் குடிநீர் பம்ப் செய்யப்பட்டு, மேற்படி தொட்டிகளில் நிரப்பப்பட்டு, அங்கிருந்து நகர்ப்பகுதிகளில் வசிக்கும் பொது மக்களுக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் தங்குதடையின்றி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேற்படி பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் மின் மோட்டார்கள் மற்றும் நகரில் உள்ள மினி பவர் பம்புகள் 76 எண்ணம் குடிநீர் மற்றும் குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது. மேற்படி மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகள் அவ்வப்போது சரி செய்யப்பட்டு குடிநீர் விநியோகம் தடையின்றி பொது மக்களுக்கு விநியோகம் செய்ய வேண்டியது அவசியமாகும்.

எனவே, மேற்படி பணியினை 2022–23ம் ஆண்டிற்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்யும் பணி மேற்கொள்ளும் பொருட்டு அவ்வப்போது குடிநீர் பணிக்காக பொருத்தப்பட்டுள்ள மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகள் மற்றும் மினி பவர் பம்ப்புகளில் ஏற்படும் பழுதுகளை சரி செய்யும் பணியினை மேற்கொள்வதற்கு தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு தொகை ரூ.9.90 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டியும், மேற்படி மின் மோட்டர்களில் ஏற்படும் பழுதுகளை உள்ளூர் கடைகளில் விலைப்புள்ளிகள் பெற்று பழுதுப் பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்:** 136 , நாள் 29.07.2022
**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது.

*******

## பொருள் எண்.17

சின்னமனூர் பேரூராட்சி 01.04.1977 முதல் 3–ம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு, 1984 முதல் 2ம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு தொடர்ந்து 2–ஆம் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. நகராட்சி 25.95 சதுர கிலோ மீட்டர் பரப்பளவினை கொண்டுள்ளது. 2011ம் வருடத்திய மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி நகரின் மக்கள் தொகை 42305 ஆகும். நகர் வாழ் பொது மக்களுக்குத் தேவையான குடிநீர் நகரிலிருந்து 4.700 கி.மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள வேம்படி களத்தில் கட்டப்பட்டுள்ள தலைமை நீரேற்று நிலையத்தில், பெரியாற்றின் நடுவில் அமைக்கப்பட்டுள்ள நீர் உறிஞ்சு கிணறுகளிலிருந்து (Infiltration wells) நீர் சேகரம் செய்யும் கிணற்றுக்கு (Collection wells) கொண்டு வரப்பட்டு, 4.700 கி.மீட்டர் தூரத்தில் அமைக்கப்பட்டுள்ள நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு குடிநீர் பம்ப் செய்யப்பட்டு, அங்கு நீர் சுத்திகரிக்கப்பட்டு, அங்கிருந்து சீப்பாலக்கோட்டை ரோட்டில் அமைந்துள்ள தரைமட்ட நீர் தேக்கத் தொட்டிகள் மற்றும் மேல்நிலைத் தொட்டிகளுக்கு நீர் பம்ப் செய்யப்பட்டு, அங்கிருந்து நகர்வாழ் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

குடிநீர் விநியோகப் பணிக்கு தலைமை நீரேற்று நிலையத்தில் 40 குதிரை திறன் மின் மோட்டார்கள் 3 எண்ணம், 30 குதிரை திறன் மின் மோட்டார் 1 எண்ணம், நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் 20 குதிரை வேக மின் மோட்டார் 2 எண்ணம், 15 குதிரை வேக மின் மோட்டார் 2 எண்ணம் மற்றும் 5 குதிரை திறன் மின் மோட்டார் 1 எண்ணம் அமைக்கப்பட்டுள்ளதுடன், தலைமை நீரேற்று நிலையத்தில் நீர் உறிஞ்சு கிணறுகளில் 5 குதிரை வேக திறன் கொண்ட நீர் மூழ்கி மோட்டார்கள் 12 எண்ணம் பொருத்தப்பட்டுள்ளன. மேலும் நகர் வாழ் பொது மக்களின் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்ய 35 எண்ணம் பொதுக் குழாய்கள் (Public Fountation) அமைக்கப்பட்டுள்ளன.

நகர் வாழ் பொது மக்களின் குடிநீர் தேவை தவிர்த்து பிற தேவைகளை பூர்த்தி செய்ய நகரில் 76 எண்ணம் மின் பவர் பம்ப் அமைக்கப்பட்டுள்ளதுடன், 121 எண்ணம் ஆழ்துளை கிணறுகள் (Hand Pump) அமைக்கப்பட்டுள்ளன. மேலும் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 4.700 கிலோ மீட்டர் நீளத்திற்கு பிரதானக் குழாய்களும், 34.900 கி.மீட்டர் நீளத்திற்கு பகிர்மானக் குழாய்களும் பதிக்கப்பட்டு குடிநீர் விநியோகப் பணி (Pumping Main and Distribution Main) அதன் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

குடிநீர் விநியோகப் பணிக்கு நாளது தேதியில் 2 மின் பணியாளர்கள் (Electrician) 1 குழாய் பொருத்துநர் மற்றும் 1 மதகு திறப்பாளர் (Turn Cock) பணியிடங்கள் மட்டுமே நடைமுறையில் உள்ளன. சீப்பாலக்கோட்டை ரோட்டில் அமைந்துள்ள தண்ணீர் தொட்டிக்கும், குருக்கள் பள்ளித் தெருவில் அமைந்துள்ள நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கும், வேம்படி களத்தில் அமைந்துள்ள தலைமை நீரேற்று நிலையத்திற்கும் (Water Tank, FIlter Bed and Water Supply Head works) பகல் மற்றும் இரவு காவல் பணிக்கு போதுமான பணியாளர்கள் இல்லை. மேலும் குடிநீர் விநியோக பொதுக் குழாய்கள், ஆழ்துளை கிணறுகள், பிரதானக் குழாய்கள், பகிர்மானக் குழாய்கள், மினி பவர் பம்ப்கள் மற்றும் மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்து சீரான குடிநீர் விநியோகம் நடைபெற போதுமான பணியாளர்கள் நகராட்சியில் நடைமுறையில் இல்லாததாலும், குடிநீர் விநியோக இடங்களில் பராமரிப்புப் பணிக்கு பணியாளர்கள் தேவைப்படுவதாலும், மின் மோட்டார்கள், ஆழ்துளை கிணறுகளில் ஏற்படும் பழுதுகளை நிவர்த்தி செய்ய பணியாளர்கள் தேவைப்படுவதாலும், போதிய பணியாளர்கள் பணியிடம் நடைமுறையில் இல்லாததால், மேற்படி பணிகளை கவனிக்க ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் நியமித்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி மேற்படி ஒப்பந்தப்பணிக்கு வழங்கப்பட்ட தொகை ஜூன் 2022 உடன்

முடிவடைவதால் ஜீலை 2022 முதல் மேற்படி பணிகளை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளவும், அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள ரூ.9.50 இலட்சத்திற்கான மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்கண்ட செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.<br>3. நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். |
| நகர்மன்ற தீர்மான எண்: | 137 , நாள் 29.07.2022 |
| தீர்மானம் : | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.18**

சின்னமனூர் பேரூராட்சி 01.04.1977 முதல் 3–ம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு, 1984 முதல் 2ம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு தொடர்ந்து 2–ஆம் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. நகராட்சி 25.95 சதுர கிலோ மீட்டர் பரப்பளவினை கொண்டுள்ளது. 2011ம் வருடத்திய மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி நகரின் மக்கள் தொகை 42305 ஆகும். நகர் வாழ் பொது மக்களுக்குத் தேவையான குடிநீர் நகரிலிருந்து 4.89 கி.மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள வேம்படி களத்தில் கட்டப்பட்டுள்ள தலைமை நீரேற்று நிலையத்தில், பெரியாற்றின் நடுவில் அமைக்கப்பட்டுள்ள நீர் உறிஞ்சு கிணறுகளிலிருந்து (Infiltration wells) நீர் சேகரம் செய்யும் கிணற்றுக்கு (Collection wells) கொண்டு வரப்பட்டு, 4.89 கி.மீட்டர் தூரத்தில் அமைக்கப்பட்டுள்ள நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு குடிநீர் பம்ப் செய்யப்பட்டு, அங்கு நீர் சுத்திகரிக்கப்பட்டு, அங்கிருந்து சீப்பாலக்கோட்டை ரோட்டில் அமைந்துள்ள தரைமட்ட நீர் தேக்கத் தொட்டிகள் மற்றும் மேல்நிலைத் தொட்டிகளுக்கு நீர் பம்ப் செய்யப்பட்டு, அங்கிருந்து நகர்வாழ் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

குடிநீர் விநியோகப் பணிக்கு தலைமை நீரேற்று நிலையத்தில் 40 குதிரை திறன் மின் மோட்டார்கள் 3 எண்ணம், 30 குதிரை திறன் மின் மோட்டார் 1 எண்ணம், நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் 20 குதிரை திறன் மின் மோட்டார் 2 எண்ணம், 15 குதிரை வேக மின் மோட்டார் 2 எண்ணம் மற்றும் 5 குதிரை வேக மின் மோட்டார் 1 எண்ணம் அமைக்கப்பட்டுள்ளதுடன், தலைமை நீரேற்று நிலையத்தில் நீர் உறிஞ்சு கிணறுகளில் 5 குதிரை வேக திறன் கொண்ட நீர் மூழ்கி மோட்டார்கள் 12 எண்ணம் பொருத்தப்பட்டுள்ளன. மேலும் நகர் வாழ் பொது மக்களின் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்ய 35 எண்ணம் பொதுக் குழாய்கள் (Public Fountation) அமைக்கப்பட்டுள்ளன.

நகர் வாழ் பொது மக்களின் குடிநீர் தேவை தவிர்த்து பிற தேவைகளை பூர்த்தி செய்ய நகரில் 76 எண்ணம் மின் பவர் பம்ப் அமைக்கப்பட்டுள்ளதுடன், 121 எண்ணம் ஆழ்துளை கிணறுகள் (Hand Pump) அமைக்கப்பட்டுள்ளன. மேலும் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 4.700 கிலோ மீட்டர் நீளத்திற்கு பிரதானக் குழாய்களும், 34.900 கி.மீட்டர் நீளத்திற்கு பகிர்மானக் குழாய்களும் பதிக்கப்பட்டு குடிநீர் விநியோகப் பணி (Pumping Main and Distribution Main) அதன் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் பிரதானக் குழாய்கள், பகிர்மானக் குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்து சீரான குடிநீர் விநியோகம் நடைபெறும் பணிக்கு ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ.9.60 இலட்சத்திற்கான மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. மேற்கண்ட செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.**
**நகர்மன்ற தீர்மான எண்:** 138 , நாள் 29.07.2022
**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது.

*******

## பொருள் எண்.19

இந்நகராட்சியின் புதிய பேருந்து நிலையத்தில் உள்ள நகராட்சிக்குச் சொந்தமான அம்மா உணவகத்தின் வளாகத்தில் வெளிநபர்கள் இரவு நேரங்களில் புகுந்து சுகாதாரக்கேடு ஏற்படுத்தி வருகின்றனர். இதனை தடுக்கும் பொருட்டு அம்மா உணவக வளாகத்தை சுற்றி தடுப்பு வேலி அமைக்கும் பணி மற்றும் அம்மா உணவக சமையலுக்கு தேவையான மிக்ஸி, கிரைண்டர், கேஸ் பாயிலர் ஆகியன பழுது ஏற்பட்டு பயன்படுத்த முடியாத நிலை உள்ளதால் பொது மக்களுக்கு காலை மற்றும் மதியம் இரு வேலைகளில் உணவு வழங்குவதில் சிரமம் ஏற்பட்டு வருகிறது. எனவே புதியதாக மிக்ஸி, கிரைண்டர், கேஸ் பாயிலர் மற்றும் சில மராமத்து பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச தொகை ரூ.6,25,000/– (ஆறு இலட்சத்து இருபத்தி ஐந்தாயிரம் மட்டும் ) மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. மேற்கண்ட செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.**
**நகர்மன்ற தீர்மான எண்:** 139 , நாள் 29.07.2022
**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது.

*******

## பொருள் எண்.20

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு வீடு வீடாக குப்பைகளை தரம் பிரித்து, கலவை உரம் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகின்றது. மேற்படி பணியில் ஒவ்வொரு வீட்டிலும் பெறக்கூடிய மக்கும் மற்றும் மக்கா குப்பைகளின் எடையை அளவீடு செய்து, கணக்கீடு செய்வதற்காக 5 எண்ணிக்கை டேபிள் டிஜிட்டல் தராசும், 2

எண்ணிக்கை தொங்கு தராசும் வாங்கிடவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.17,000/—ற்கும் (பதினேழாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—** மன்றம் அனுமதிக்கலாம் **ந.க.எண்.7745/2022/எச்1**

**நகர்மன்ற தீர்மான எண்:** 140 , நாள் 29.07.2022

**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.21**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் தூய்மை நகருக்கான மக்கள் இயக்கம் திட்டத்தின்கீழ் 100% திடக்கழிவு மேலாண்மை பணி மூலம் வீடு வீடாக குப்பைகளை தரம் பிரித்து கலவை உரம் தயாரிக்கும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. அதற்காக பழுதடைந்த 16 BOV வாகனங்கள் மற்றும் 15 தள்ளு வண்டிகளை பழுதுநீக்கம் செய்திடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வாகனங்கள் பழுது நீக்கம் செய்து வரப்பெற்றவுடன் முழுவீச்சில் தரம் பிரிக்கும் பணி செய்வதற்காக 500 (50Lit) எண்ணிக்கையில் பிளாஸ்டிக் கொள்கலன்கள் புதிதாக வாங்குவதற்கும் அதற்கான் உத்தேச செலவினம் ரூ.5,00,000/—ற்கும் (ஐந்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—** 1. மன்றம் அனுமதிக்கலாம் **ந.க.எண்.7746/2022/எச்1**

**நகர்மன்ற தீர்மான எண்:** 141 , நாள் 29.07.2022

**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.22**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்படும் இரண்டாம் நிலை சேகரிப்பு வாகனமான TN 60 Z 2921 டிராக்டர் வாகனத்திற்கு 2022—2023ஆம் ஆண்டிற்கான புதுப்பித்தல் பணி (Renewal) மேற்கொள்ளவதற்கு இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.89 நாள்.27.06.2022ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது அதனை தொடர்ந்து 05.07.2022ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்காணும் விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | ஸ்ரீ அய்யனார் மோட்டார்ஸ், தேனி | ரூ.1,39,567/— |
| 2. | செந்தில் டீசல் ஆட்டோ ஒர்க்ஸ் | ரூ.1,44,000/— |

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:-** | 1. குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீ அய்யனார் மோட்டார்ஸ், தேனி என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>2. பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி எதிர்வரும் நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம். |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 142 , நாள் 29.07.2022 |
| **தீர்மானம் :** | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.23**

பொதுசுகாதாரம் – ஒரு முறை பயன்படுத்தப்பட்டு தூக்கி எறியக்கூடிய நெகிழி (பிளாஸ்டிக்) பொருட்கள் உபயோகிப்பதற்கும் விற்பனை செய்வதற்கும் தமிழக அரசினால் தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.28459/2021/எச்1 நாள்.02.03.2022 மற்றும் தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.TNPCB/THENI/F-MISC-23/STF/2022, நாள்.04.03.2022–ன் படியும் பிளாஸ்டிக் பொருட்கள் உபயோகிப்பதை தடுக்க நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. அவ்வப்போது இந்நகராட்சி அலுவலர்கள் மூலமாக தடைசெய்யப்பட்ட நெகிழி பொருட்கள் விற்பனை செய்யக்கூடிய வணிக நிறுவனங்களுக்கு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டு அபராதம் விதிக்கப்படுகிறது. இருப்பினும் ஒருமுறை பயன்படுத்தக்கூடிய நெகிழி (பிளாஸ்டிக்) பொருட்கள் உபயோகிப்பதும், விற்பனை செய்வதும் தொடர்ந்து நடைமுறையில் இருந்து வருகிறது. எனவே பிளாஸ்டிக்கழிவின் விளைவுகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும், கொரோனா தொற்று பரவுதலை தடுக்கும் வகையில் பொது மக்கள் கடைபிடிக்க வேண்டிய முக்கிய செயலான முகக்கவசம் அணிவது குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கும் தேவையான, நோட்டீஸ்கள் அரசு அங்கீகாரம் பெற்ற அச்சகங்களில் விலைப்புள்ளி பெறப்பட்டு வாஙகுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது அதற்காகும்தோராய செலவு ரூ.1.00 (ஒரு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று அவசர அவசியம் கருதி நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 143 , நாள் 29.07.2022 |
| **தீர்மானம் :** | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.24**

இந்நகராட்சிக்குட்பட்ட தலைமை நீரேற்று நிலையம் மற்றும் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் உள்ள மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை சரி செய்யும் பணிக்கு நகர்மன்றத் தீர்மான எண்.281, நாள்.31.05.2021ம் தேதி அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணியை செய்வதற்கு 25.07.2022ம் தேதி விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரு விலைப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு, மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளிதாரர் | தொகை |
|---|---|---|
